
# தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம்
# கொழும்புக் கிளை



## 2013ம் ஆண்டு ஒன்று கூடல்



**THELLIPPALAI MAHAJANA COLLEGE**
**OLD STUDENTS' ASSOCIATION**
**COLOMBO BRANCH**

E-mail : mcosacolombobranch@yahoo.com

with best compliments from

# TASTE OF ASIA

your kitchen

SERVING YOU THE VERY BEST OF ALL ASIAN CUISINE AND OUR RENOWNED SRI LANKAN, JAFFNA CURRIES

Juice Bar
Cakes & Pastries Corner
Ice Cream Parlor

Dine in & Take Away


No.324, Galle Road, Colombo 04.
Tel: 011 2589921



**கல்லூரி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஆனந்த நடராஜன்**


குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

## எங்களது ஸ்தாபக அதிபர்



அமரர். தெ. அ. துரையப்பாபிள்ளை

## மகாஜன சிற்பி



## அமரர். தெ. து. ஜயரத்தினம் அவர்கள்

# கல்லூரிக் கீதம்

(ஜன கண மண... என்ற மெட்டு)

ஜயஜய மாஜன ஜயசுப மாதா
ஜயஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப் பாபுகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத் தினம் பணி நினைவோம்.

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனை நீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக வெல்லுக மகாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மகாஜன மாதா .

புலவர் நா.சிவபாதசுந்தரனார்

# கொடிக்கீதம்

கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா
கோல முற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா

சரணம்

தீர முற்றுத் திருவடைந்த
தெய்வ துரை யப்பரது
தீர்க்கமான தியான மதில்
தேறிவந்த மகாஜனாவின்
(கொடி)

மலர் மலிந்து மறையுரைத்து
மறுவிலாத சுடர் விரித்து
தவம் பொலிந்த மகாஜனாவைத்
தாங்கு கொடியின் தாள் பணிவோம்
(கொடி)

தன மளித்துத் தவம் மிகுந்து
தாவியாடுங் கொடியிது
மன மகிழ்ந்து மலர்கள் தூவி
வாழி என்று வணங்குவோம்.
(கொடி)

ஆக்கம் : புலவர் நா. சிவபாதசுந்தரனார்

தெல்லிப்பளை - மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கொழும்பு
TELLIPPALAI - MAHAJANA COLLEGE
Old Students' Association - Colombo Branch
33/1, Frances Road, Colombo-6. Tel :2585394, 071-2744924

## தலைவரின் வாழ்த்துச் செய்தி

**திரு. ஸ்ரீலஸிஜயன்**

சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும் முழு வளர்ச்சி பெற்றுச் சிறந்த உயர்நிலைப்பட்ட சமூகப் பொருத்தபாட்டுடன் வாழ்க்கை நடத்த அவனுக்கு வழங்கப்படுவது கல்வியாகும். கல்வி எனப்படுவது குழந்தையினது உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் சிறந்த பண்புகளை வெளிக்கொணரும் செயல்முறையாகும் என மகாத்மா காந்தி விளக்கம் தந்தார். எழுத்தறிவு பெறுவது கல்வியின் நோக்கமன்று. அது அதன் தொடக்க நிலையே ஆகும். உண்மைக் கல்வி வெறும் ஏட்டுப் படிப்பை மட்டும் கொண்டதாக இருத்தல் கூடாது. சமுதாயத்தில் வாழ்வாங்கு வாழத்தக்க மனப்பாங்கை கல்வியளிக்க வேண்டும். அத்தகைய கல்வியை எமக்குத்தந்த களமே மகாஜனா.

பல இன்னல்களைக்கண்ட மகாஜனா இன்று அதிபரின் வழிகாட்டலுடன் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் சைவமும் தமிழும் மிளிர தலைநிமிர்ந்து நிற்பது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரியின் இன்றைய வளர்ச்சிக்கு அதிபரின் (திரு. வேல்சிவானந்தம்) அயராத உழைப்பும் கல்லூரியில் அவர் கொண்ட பற்றுதலுமே காரணம் என்று கூறினால் அது மிகையாகாது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குரிய கல்வியை வழங்கி வரும் எங்கள் மகாஜனாவுக்கு உச்சளவிலான உதவியை வழங்குதல் மகாஜனன் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

இன்றைய ஒன்றுகூடலில் இந்த உயரிய எண்ணத்தை எல்லோரும் பகிர்ந்து கொள்வோம். அதனைச் செயற்படுத்துவோம். எமது இளைய சந்ததியினரும் வாழ்வாங்கு வாழ வழி சமைப்போம்.

# யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை
# J/MAHAJANA COLLEGE TELLIPPALAI

**Principal**
K.VelSivanathan
Pricipal S.L.P.S. I
BA(Hons(Philosophy.Sp). Dip in Edu(Merit)

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

எங்கள் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை செயற்குழுவும், எங்கள் பழைய மாணவரகளும், குடும்ப ஒன்று கூடல் நடாத்த உள்ளதை அறிந்து மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருக்கின்றது.

எங்கள் கல்லூரியின் அபிவிருத்திக்கு பழைய மாணவர்கள் உன்னதமான பங்களிப்பை வழங்கி வருகின்றீர்கள். இந்த வகையில் குடும்ப ஒன்றுகூடல் நிகழ்வு கல்லூரியின் பாசத்தை மேலும் கூட்டும். கல்லூரியின் தற்கால அபிவிருத்தியை அறிந்து கொள்வதற்கும் நல்ல சந்தர்ப்பமாகும்.

நவமகாஜன சிற்பி அமரர் தெ.து. ஜயரத்தினம் அவர்களின் நூற்றாண்டு பிறந்த தின விழா 2013 ஒக்டோபர் 15இல் பெருவிழாவாக கொண்டாட திட்டமிட்டுள்ளோம். இவ்விழாவிற்கு பழைய மாணவர்களாகிய உங்களின் பங்களிப்பை பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

விளையாட்டுப் போட்டி, இணைப் பாடவிதான புறக்கிருத்திய செயற்பாட்டிற்கு எங்கள் மாணவர்கள் கொழும்பிற்கு வரும் போது கொழும்பு கிளைத் தலைவரும், செயற்குழுவும் தங்குமிட வசதிகளைச் செய்து பிள்ளைகளை உற்சாகப்படுத்தி வருகின்றீர்கள். இதனால் தேசிய மட்ட வெற்றிகளை மாணவரகள் பெற்றுள்ளனர்.

குடும்ப ஒன்றுகூடல் சிறப்பாக நடைபெறுவதற்கும் இதனால் கல்லூரிக்கும் மாணவர்களுக்கும் பெரும் பயன் கிடைக்கவும் எனது இதய பூர்வமான நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

# மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம்

## THE MAHAJANA COLLEGE FOUNDATION FOR EDUCATIONAL DEVELOPMENT

A Company Incorporated under the Companies Act of No 17 of 1982
Mailing Address: 19 -1/6 Station Road, Colombo-06, Sri Lanka

தலைவரிடமிருந்து

தெல்லிப்பளை மகாஜன கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையின் ஆண்டு ஒன்றுகூடல் வரும் சித்திரை மாதம் 20ந் திகதி நடைபெற இருப்பதையிட்டு இந்த வாழ்த்து செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இத்தருணத்தில் எமது இயக்குனர் சபை இந்த பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றனர்.


மகாஜன கல்லூரியின் கல்வி அபிவிருத்தி நிறுவனம் கல்லூரியின் வளர்ச்சிக்கு கூடியளவில் நிதியுதவிகளை பழைய மாணவ சங்கங்களிடமும் மற்றும் தனிப்பட்ட மாகாஜனன்களிடம் இருந்தும் நன்கொடைகளை பெற்று கல்வி, விளையாட்டு மற்றும் கல்லூரியின் தேவைகளுக்கு உதவுவதற்கு ஓர் தூண்டியாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது. மேலும் க.பொ.த. சாதாரண தரத்தில் குறிப்பிட்ட பெறுபேறுகளை பெறும் மாணவர்களுக்கு மாதாந்த உதவித்தொகையை வழங்கி அந்த மாணவர்களின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உதவி வருகின்றது. இதற்காக ஓர் தனிப்பட்ட நிதியம் நிர்வகிக்கப்படுகின்றது.

2007ம் வருடம் ஸ்தாபிக்கப்பட்ட இந்த நிதியம் கடந்த ஆறு ஆண்டுகளில் கல்லூரியின் பல தேவைகளை நிறைவேற்றியுள்ளதை இங்கு குறிப்பிடுவது மிகையாகாது.

மகாஜன கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் பங்குபெறும் இந்த ஒன்றுகூடல் நிகழ்வு பழைய மாணவர்கள் ஒன்றுகூடி உற்சாகமான உறவை தொடர்வதற்கு உறுதுணையாகவுள்ளது. இந்த நிகழ்வு சிறப்பாக அமைவதற்கு உழைத்த உறுப்பினர் சபைக்கும் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்த மகாஜன கல்லூரியின் அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்களை இத்தருணத்தில் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

சி.சிறிகணநாதன்
தலைவர்
மகாஜன கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம்

12.04.2013








TELLIPPALAI MAHAJANA COLLEGE


TELLIPPALAI MAHAJANA COLLEGE




COLLEGE


Old Student's Association


Old Student's







# திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்களின் சமூகப் பணிகள்.

உலகத்தின் பார்வை இருவகைப்பட்டவர்களை விரைவில் இனம் காணுகின்றது. உன்னதமான குணங்களும் திறமைகளும் கொண்டவர்கள், மிகக் கீழ்மைக் குணங்களும் செயல்களுமுடையவர்கள், என்பவர்களே அந்த வகையினர். சேவை மனப்பான்மையும் உண்மையும் உறுதியும் கொண்டவர்களை பணிகள் நாடி வருகின்றன, அல்லது அவர்களே தேடிக் கொள்கிறார்கள். திரு.ஜெயரத்தினம் அவர்கள் தானே தேடிக்கொண்ட பணிகளும் உண்டு. தந்தை காட்டிய பாதையிலே சென்று தானே பொறுப்பேற்றுக் கொண்டவை கல்விப்பணிகளும் சமயப்பணிகளுமாகும். நாடி வந்தவை சமூகப் பணிகள். ஒரு வகையில் நோக்கினால் எல்லாமே சமுதாயத்தைச் சென்று சேரும் பணிகள் தான். அவை சமூக விருத்திக்கு அமைந்தன.

எந்தக் காரியத்தையும் சங்கங்கள் அமைத்துச் சாதித்திடல் வேண்டும் என்பது பாவலரின் கருத்து. அதனால் போலும் திரு. ஜெயரத்தினம் அவர்களும் பல சங்கங்களோடு சங்கமமானார். எனவே சங்கங்களின் பெரும் பதவிகளைப் பொறுப்பேற்கவும்,சேவையாற்றவும் வேண்டிய நிலை ஏற்பட்டது. சில வேளைகளில் சில செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் துணையாகத் தானே சங்கங்களை உருவாக்கியுள்ளார்.

1965ஆம் ஆண்டிலே இராமநாதன் இசைக்கல்லூரி திரு.சு நடேசபிள்ளையின் மறைவு காரணமாக நிலை தளர்ந்த போது மேற்படி கல்லூரி ஆசிரியர் சங்கத்தைக் கூட்டி அதன் தலைமைப் பதவியை உறுதியோடு ஏற்று அது உறுதியுடன் நிலைபெற்று இயங்க வழிவகுத்தார். இது பற்றித் திரு. அம்பிகை பாகன் அவர்கள் கூறுகிறார், கலாநிதி சு.நடேசபிள்ளை அவர்கள் ஸ்தாபித்து நடாத்தி வந்த இராமநாதன் இசைக் கல்லூரி அவரது திடீர் மரணத்தால் ஓர் இக்கட்டான நிலையை அடைந்தது. அதனை நடத்த ஒரு சபையோ நிர்வாகக் குழுவோ இருக்கவில்லை. இந்த நிலையிலேதான் திரு. ஜெயரத்தினம் அவர்கள் முன்வந்து இசைக் கல்லூரி ,பெற்றார் சங்கம் ஒன்றை நிறுவிச் சிறிது காலம் தலைவராகவிருந்து நடாத்தி வந்தார். பின்பு கல்வியிலும் இசைக் கலையிலும் அக்கறையுள்ள பிரமுகர்களைக் கொண்ட சபையை நிறுவி அச் சபையிடம் இசைக் கல்லூரியின் நிர்வாகத்தை ஒப்படைத்தார். இவர் காலத்தினாற் செய்த உதவி இப்பணி தொடர உதவியது. இக் கல்லூரி இன்று பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பீடமாய் அமைந்து நுண்கலைப் பட்டதாரிகளை உருவாக்கி வருகின்றது.

1959ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விச் சபையின் இணைச் செயலாளராகப் பதவியேற்று நெடுங்காலம் அப்பதவியை வகித்தார்.இச்சங்கம் இந்துப் பல்கலைக்கழகம் அமைப்பதற்குப் பெரு முயற்சி மேற்கொண்டது. இது பற்றியும் திரு. அம்பிகைபாகன் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் ஒரு கலாசாரப் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு திரு. பண்டாரநாயக்க விருப்பம் தெரிவித்த போது பரமேஸ்வரக் கல்லூரியையும் இராமநாதன் கல்லூரியையும் அவற்றுக்குரிய சொத்துக்களையும் அரசிடம் ஒப்படைக்க திரு. நடேசபிள்ளை முன்வந்தார். இதற்கு வேண்டிய ஆதரவு வழங்க திரு. ஜெயரத்தினம் அவர்களும் நானும் பல இந்து மதத் தலைவர்களின் ஒத்துழைப்போடு அயராது உழைத்தோம். யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவுவது அரசியற் பிரச்சினையாகியது. பல பிணக்குகளை ஏற்படுத்தியது. இதனால் நடேசப்பிள்ளை காலத்தில் அவரது கனவு நனவாகவில்லை. எனினும் காலந்தாழ்த்தி யாழ்ப்பாணத்தில் ஒரு வளாகம் ஏற்பட்டிருப்பது வரவேற்றற்குரியது.

ஆசிரியர் நலன்கள் பேணப்படல் வேண்டும் என்பதில் திடமான உறுதி கொண்டவர் திரு. ஜெயரத்தினம் அவர்கள். அதனால் சங்கச் செயற்பாடுகளில் அவர் பெரிதும் அக்கறை காட்டினார். 1945இல் அனைத்திலங்கை ஆசிரியர் மாநாட்டுக்கு வடமாகாண ஆசிரியர் சங்கப் பேராளராகச் சென்றார். 1946ஆம் ஆண்டில் வடமாகாண ஆசிரியர் சங்க செயலாளர் ஆனார். 1949ஆம் ஆண்டு வட மாகாண ஆசிரியர் சங்கத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். 1956ஆம் ஆண்டு மீண்டும் வடமாகாண ஆசிரியர் சங்கச் செயலாளர் ஆனார். 1964ஆம் ஆண்டு அனைத்திலங்கை அதிபர் மாநாட்டு செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1966ஆம் ஆண்டு வரை அப் பதவியை வகித்தார். 1967ஆம் ஆண்டு வட மாகாண அதிபர் சங்கத் தலைவரானார். மகாஜனா என்ற மாமேருவைத் தாங்கி நின்ற அவர் இது போன்ற பல பணிகளையும் ஏற்றுக் கொண்டார். கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக இருந்த திரு. பாஸ்கரலிங்கம் " திரு. ஜெயரத்தினம் அவர்கள் தொட்ட காரியம் எதையும் மிகச் சிறப்பாகவும் வெற்றியாகவும் முடிக்கத் தவறியதில்லை. அவர் ஈடுபட்ட துறைகளும் மிகப் பலவாகும் பல சங்கங்களின் உறுப்பினராகயிருந்து சிறப்புடன் பணியாற்றி வடமாநில பள்ளிக் கூடங்களுக்கிடையே நல்ல உறவையும் இணக்கத்தையும்

ஏற்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது." எனப் பாராட்டியுள்ளார். இலங்கை அதிபர் சங்கத்தில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், அமெரிக்கர், ஆங்கிலேயர் முதலியோர் அங்கம் வகித்தனர். இவர்கள் எல்லோரும் திரு. ஜெயரத்தினம் அவர்களை சிறந்த கல்விமானாகக் கருதி அவருடைய ஆலோசனைகளுக்குப் பெருமதிப்புக் கொடுத்தனர். நோயால் துன்பமடைபவர்களுக்கு ஆறுதலளிப்பதாக அமைந்தது யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை. தெல்லிப்பழையிலிருந்து யாழ்ப்பாணம் வந்து செல்லும் சிரமத்தை குறைப்பதற்கெனத் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை அமைக்கப்பட்டது. 1949ஆம் ஆண்டு இவ் வைத்தியசாலைச் சபையின் நிறுவக உறுப்பினராகி அதன் முதற்றலைவரானார். அந்த வைத்தியசாலையின் விரிவாக்கத்திற்கு முன்னின்றுழைத்தார். மீண்டும் 1953ஆம் ஆண்டில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு 1955ம் ஆண்டு வரை தொடர்ந்து பதவி வகித்தார். மகாஜனாவின் வளர்ச்சிக்கு களியாட்ட விழாக்களை நடாத்தியது போல இந்த வைத்தியசாலையின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் களியாட்ட விழா நடத்தி நிதி திரட்டப்பட்டது.

எழுத்துத் துறையின் வளர்ச்சிக்கெனவும் பெரிதும் முயன்றுள்ளார். மாணவரிடையே எழுத்தாற்றலை வளர்க்கும் நோக்கத்துடன் 1953ஆம் ஆண்டிலே மகாஜன் என்ற ஆண்டிதழ் வெளியீட்டை ஆரம்பித்தார். சுமார் 35 வருடங்கள் இம் மலர் தொடர்ந்து வெளியிடப்பட்டது. இம் மலர் எழுத்தாற்றல் மிக்க மாணவர்களுக்கு ஊக்க சக்தியாக அமைந்தது. மாணவர் தம் திறமையை வெளிப்படுத்தினர். கவிஞர் உருத்திரமூர்த்தி, அ.செ. முருகானந்தன், அ.ந. கந்தசாமி ஆகியோர் மகாஜனா உருவாக்கிய மும் மணிகள் என்பர். ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களுள் குறிப்பாகப் பெண் எழுத்தாளர்களுள் சிறந்து விளங்கும் திருமதி. கோகிலா மகேந்திரன், புதுக் கவிதைத் துறையில் ஈடுபட்டுள்ள க. ஆதவன், உ.சேரன், விஜயானந்தன் போன்றோரும் மகாஜனாவில் உருவாக்கப்பட்டவர்களே. இவர்களுக்கு அத்திவாரமிட்டவர் திரு. ஜெயரத்தினம் அவர்களே.

1960ஆம் ஆண்டில் பாவலர் துரையப்பா பிள்ளையின் இலக்கியப் படைப்புகளைச் "சிந்தனைச் சோலை" என்ற நூலாக வெளியிட்டார். தந்தையின் பணியில் ஏற்றம் பெருக்கி அவர் உள மகிழ்வோடு தமது ஆக்கத்தை கான அவரைச் சிலையுருவில் நிறுவி அவர் திருப்பெயர் முன்னிருந்த ஒரு பெயர் மாற "பாவலர்" என்ற சிறந்த விருது அமைய வைத்து அவர் ஆக்கங்களையெல்லாம் ஒன்றாக்கிச் சிந்தனைச் சோலை எனும் நூலாக மலரச் செய்து கலையுலக ஆய்வாளர் எல்லாம் பாவலர் துரையப்பாப் பிள்ளையின் கலைப் பணி என்று ஆய்வதற்குரிய பெருமையும் ஆக்கி வைத்தவர் இப் பெருமகனார் ஆவார்.

இந்நூலின் பதிப்பாசிரியராக பொறுப்பேற்ற புலவர் நா. சிவபாதசுந்தரனார் "பாவலர் துரையப்பா பிள்ளை பற்றி நான் பலரிடம் கேட்டறிந்தேன் பிள்ளையவர்களின் பாடல்களை, இலக்கியப் படைப்புக்களைப் பெற்று ஆராய்வதில் நாட்டம் கொண்டிருந்தேன். பிள்ளையவர்களின் நூல்களை ஆராய வேண்டுமென்ற பெரு விருப்பு அன்னாரின் மூத்த மகன் திரு. தே. து. ஜெயரத்தினம் அவர்களிடமிருந்து பிள்ளையவர்களின் அச்சேறிய, அச்சேறாத படைப்புக்களை கற்றறிய விரும்பி அவரிடம் கேட்டபோது மனமுவந்து கொடுத்தார். அதனைப் படித்த போது ஈழத்துச் செய்யுள் நோக்கில் பிள்ளையவர்களின் படைப்பு புதுமையானது என்பதை உணரக் கூடியதாயிருந்தது. இத்தனை செய்யுட் செல்வத்தையும் அச்சேற்றித் தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்காது விடுவது பிழை என்பதையும் உணர்ந்தேன். திரு. ஜெயரத்தினம் அவர்களை அணுகி இது பற்றிக் கூறினேன்.
அவரும் உளப் பூர்வமாக இயைந்தார். பதிப்புச் செய்யும் பொறுப்பை என்னிடம் கொடுத்தார்". என கூறுகிறார். அரியதொரு நூலைத் தமிழுலகம் பெற தந்தை புகழ், இலக்கிய உலகில் நிலைக்க ஜெயரத்தினம் உதவினார்.

கல்வியில் சிறந்தவர்களை மட்டும் கௌரவிப்பதோடு அமையாது கலைத்துறையிலும் விளையாட்டுத் துறையிலும் இலக்கியத்துறையிலும் சிறந்து விளங்குகின்றவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்து இன்று பலராலும் வலியுறுத்தப்படுவதாக உள்ளது. 1968ஆம் ஆண்டில் அம்பனைக் கலைப் பெருமன்றக் காவலராய் அமர்ந்து அறிஞர்களுக்கும் தலைவர்களுக்கும் பட்டமளித்துப் பாராட்ட வழி வகுத்தார். 1968ஆம் ஆண்டிலே பன்னாலை திரு. க. திருநாவுக்கரசு அவர்களுக்குப் "பண்ணிசைச் செல்வர்" என்ற விருதினை திரு. ஜெயரத்தினம் அவர்கள் வழங்கினார்கள். 1969ஆம் ஆண்டு அளவெட்டியைச் சேர்ந்த தவில் வித்துவான் திரு. ந. குமரகுரு அவர்களுக்கு "லயஞான லாவண்ய கலாபதி" என்ற விருதினைச் சங்கீத மேதை சித்தூர் சுப்ரமணிய பிள்ளை அவர்கள் வழங்கினார்கள். 1970ஆம் ஆண்டு தெல்லிப்

பழை பிரம்ம ஸ்ரீ விஸ்வநாதையர் அவர்களுக்குப் பொற்கிழியீந்து "இசை ஞான மணி" என்ற விருதினை இசைப் புலவர் ந. சண்முக ரத்தினம் அவர்கள் வழங்கினார்கள்.

பெருந்தொகையான இலக்கியப் படைப்புக்களை தமிழுலகுக்கு ஈந்து இலக்கியப் பணியாற்றிய இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களுக்கு 1972ஆம் ஆண்டு "இலக்கியச் செல்வர்" என்ற விருது வழங்கப்பட்டது. அறிஞர் அண்ணாவிற்கும் மகா கவிக்கும் நினைவஞ்சலிக் கூட்டம் நடத்தப்பட்டது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்திக் கௌரவித்துள்ளது. பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. அவற்றுள் நல்ல தீர்ப்பு, நீங்காத நினைவு, சிதைந்த வாழ்வு போன்ற நாடகங்கள் தங்கப் பதக்கங்களைப் பெற்றன. கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் பாராட்டும் கிடைத்தது. 1973ஆம் ஆண்டு பல சிறு கதைகளை எழுதிய அ.செ. முருகானந்தன் அவர்களும் சங்கீத பூஷணம் செல்வி நாகம்மா கதிர்காமர் அவர்களும் பாராட்டப்பட்டனர். வருடந் தோறும் உழவர் திருநாளும் திருவெம்பாவையும் தமிழர் பாரம்பரியத்திற்கேற்ப நடத்தப்பட்டன. அத்துடன் கவிஞர் மகாகவி பற்றிய ஆய்வுத் தொகுப்பொன்றும் மறுமலர்ச்சிக் காலம் என்ற நூலும் வெளியிடப்பட்டன. இவ்வாறு இம் மன்றம் பெரும் பணியாற்றியதில் திரு. ஜெயரத்தினம் அவர்களுக்கும் பெரும்பங்குண்டு.

இவரது அரும் பணிகளையும் பெரும் குண த்தையும் அறிந்த அரசு 1967ஆம் ஆண்டு யாழ்மாவட்ட சமாதான நீதிபதியாக நியமித்துப் பெருமை பெற்றது. இதனைப் பற்றி கவிஞர் மகாகவி

நின்னை மதிக்கும் நினைப்பில் அளித்துள்ள
பட்டமோ காற்றில் பறக்கும் தனை சிறிது
பட்டம் சிறிது அந்தப் பட்டத்தை நின்பெயரோடு
இட்டுப் பெருப்பிக்கும் எண்ணம் இருந்ததனால் தந்தார்.

எனக் கூறி வியக்கின்றார். நாட்டு மக்களின் சமாதான நீதிபதியாகவும் இருந்து இன்முகத்தோடு பணி புரிந்தார்.

உலகெங்கும் பரந்து கிளை நிறுவி அருஞ் சேவையாற்றி வரும் "அரிமா கழகம்" 1976ஆம் ஆண்டு தெல்லியூரில் நிறுவகத் தலைவராக திரு. ஜெயரத்தினம் அவர்களைத் தெரிவு செய்தது. ஆயினும் அந்தப் பதவியைத் தொடர்ந்தாற்றி நற்சேவை புரிவதற்கு இடமளிக்காது இறைவன் தம் பாதங்களில் சேர்த்துக் கொண்டான்.

கல்வித்துறை, சமயத்துறை, கலைத் துறை, பொதுத் துறை எனப் பல் வேறு துறைகளில் " என் கடன் பணி செய்து கிடப்பதே" எனத் துணிவோடு செயற்பட்ட அவர் தனக்கென வாழப் பிறந்தவர் அல்லர்.

திருமதி. ஆர். கெங்காதரன்
ஓய்வு நிலை ஆசிரியை

# பாவலருக்கும் பாடசாலைக்கும் ஆற்ற வேண்டிய பணிகள்

"தீரமுற்று திருவடைந்த தெய்வத் துரையப்பரது
தீர்க்கமான தியானமதில் தேறிவந்த மாஜனா"
"மலர்மலிந்து மறையுரைத்து மறுவிலாத சுடர்விரித்து
தலம் பொலிந்த மாஜனா"

இன்று நூற்றாண்டு விழாவும் கண்டுவிட்டது இந்த வேளையில் பாவலருக்கும் பாடசாலைக்கும் நாம் ஆற்றவேண்டிய பணிகள் குறித்து சற்று சிந்தித்து பார்ப்பது பொருத்தமென்று கருதுகின்றேன்.

இன்று வரை மகாஜனா பற்றியும், பாவலர் பற்றியும் வெளிவந்திருப்பவை அரைத்த மாவை அரைப்பது போன்றவையாகவே தெரிகின்றன. எனவேதான் இவற்றுக்குப் புறம்பாகவும் சிந்திக்க வேண்டியுள்ளது. இத்தனை காலமும் நாங்கள் செய்து வந்தது, கூறி வந்தது எல்லாம் துரையப்பா ஒரு பாவலர் , மகாஜனாவை ஆரம்பித்தவர் என்பதை மட்டுமே. பாடசாலைகளை ஆரம்பித்தவர்கள் பாவலர்களாகவும் எழுத்தாளர்களாகவும் வேறும் பலர் இருந்திருக்கின்றனர்.

ஓருதாரணம் - நாகமுத்து இடைக்காடர் வைத்தீஸ்வரா வித்தியாலயம், வைத்தீஸ்வரன் கோயில் என்பவற்றின் தாபகர். "நீலகண்டன்" (சாதிக்கார வேளாளன் ) என்ற நாவலை எழுதி வெளியிட்டவர். தலித்தியம் பற்றிய எண்ணம் இந்தியாவில் எழுதுவதற்கு பல பத்தாண்டுகளுக்கு முன், இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தோன்ற மேலும் பல பத்தாண்டுகளுக்கு முன் சாதியத்திற்கு எதிராக எழுதிய உயர்சாதி வேளாளன் நாகமுத்து. இதனையும் இன்று எவரும் பேசுவதில்லை . ஆனால் இதற்கும் பல பத்தாண்டுகளுக்கு முன்னர் சாதியத்திற்கு எதிராக எழுதியவர் Taylor என்கின்ற பாவலர் துரையப்பா பிள்ளை. பாவலர் துரையப்பா தமிழ் மொழிப் பாவலர் மட்டுமல்ல, ஆங்கில மொழிப் பாவலரும் கூட என்கின்றார் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர். மாவிட்டபுரம் நவநீத கிருஷ்ண பாரதியார், "மில்டனுக்கு நிகர் ஆங்கில மொழிப்புலவன் துரையப்பா" என்று தனது பாடலொன்றில் குறித்துள்ளார்.

இவை எதுவும் வெளியுலகுக்கு தெரியாத விடயங்கள் Morning star, Hindu organ என்பவற்றில் வெளிவந்தவை. அத்துடன் உதயதாரகை, இந்துசாதனம் பத்திரிகைகளுக்கு அவரால் எழுதப்பட்ட கட்டுரைகளையும் தேடிப் பெற்றுக் தொகுக்க வேண்டிய கடமையும் எமக்கு உண்டு. பாவலர் தனது நண்பர்களுக்கும், கல்விமான்களுக்கும் எழுதிய கடிதங்கள் அவர்கள் பாவலருக்கு எழுதிய கடிதங்கள் இவற்றைத் தேடிக் கண்டால் பாவலர் பற்றியும் நாங்கள் அறியாத பல தகவல்களை அறியும் வாய்ப்பு உண்டாகும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள், கொழும்பு பழைய மாணவர் சங்கக் கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட நிறுவியவர் நினைவு தினம் ஒன்றில் நிகழ்த்திய உரையில் எழுப்பிய வினாவொன்றையும் அது தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துக்கள் சிலவற்றையும் புறந்தள்ளிவிடமுடியாது. தனியார் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட நாட்களிலும் பின்னரும் யாழ்ப்பாணத்தில் தாபிக்கப்பட்ட பாடசாலைகள் யாவும் தாபகர் பெயரைக் கொண்டோ, அல்லது சைவ சமயம் சம்பந்தமான பெயர்களைக் கொண்டோ தான் தாபிக்கப்பட்டன. இராமநாதன் கல்லூரி, நாவலர் பாடசாலை, வேலாயுதம் வித்தியாலயம், சிதம்பரா வித்தியாலயம் என்பன சில உதாரணங்கள். சமயப் பெயர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டவை, சரஸ்வதி வித்தியாசாலை, சைவப் பிரகாச வித்தியாசாலை, நடேஸ்வராக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, இன்னும் பல உள. இப்படியிருக்க பாவலரால் தாபிக்கப்பட்ட பாடசாலைக்கு "மகாஜனா ஆங்கில உயர்தரப் பாடசாலை" என்று பாவலர் பெயரிடக் காரணமென்ன ? இது பேராசிரியரால் எழுப்பப்பட்ட வினா.

"மக்கள்" "பொதுசனம்" "மகாஜனம்" என்ற சொற்பதங்கள் தமிழகத்திலும் சரி, இலங்கையிலும் சரி புழக்கத்திற்கு வந்திராத காலத்தில் தனது பாடசாலைக்கு தனது பெயரையோ, சைவப் பிள்ளைகளின் வளர்ச்சிக்கென ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைக்கு சைவ சமயம் சார்ந்த பெயரையோ சூட்டாமல் "மகாஜனா" என்று பெயரிடப்பட்டதற்கு காரணம்

யாதாயிருக்கும். கூர்ந்து சிந்தித்தால் இது ஒரு சூத்திரம் என்றும், இதற்குள் இந்தப் பெயருக்குள் ஒரு பெரிய இரகசியம் இருக்கும் போலவும் எண்ணத் தோன்றுகின்றது என்றும் இந்தச் சூத்திரத்தை விடுவித்தால் மகாஜனா பற்றி நாங்கள் அறிந்திராத பல உண்மைகளை கண்டறியவும் முடியலாம் என்றும் அன்று பேராசிரியர் தெரிவித்திருந்தார். இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானது.

மகாஜனா ஆங்கில உயர்தரப் பாடசாலை, கல்லூரி அந்தஸ்தை அடைந்த போது அதற்குச் சூட்டப்பட்ட பெயர் “சைவ மகாஜனக் கல்லூரி” என்பதாகும். பின்னர் அது “மகாஜனக் கல்லூரி” என்று பெயர் மாற்றம் பெற்றது. என்பதை நாமறிவோம். இந்த மாற்றம் செய்வதற்கான காரணத்தை கல்வி இலாகாவின் கோவைகளில் காணக் கூடியதாயிருக்கும். அவற்றைக் கண்டறிவதினூடாகவும் சில உண்மைகளை வெளிக் கொணர முடியும். பாவலருக்கு மிக நீண்டதொரு செழுமை மிக்கதொரு கல்விப் பாரம்பரியம் இருந்துள்ளது. இவருடைய தந்தையார் கச்சேரி முதலியார் பதவியிலிருந்தவர். பாவலரின் தமையனார் திரு. தெ.அ. இராசரத்தினம் பிள்ளை பெரும் அறிவாளி இவர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் தாபகரும் முதல்வருமான டாக்டர் மிலரின் வாழ்கை வரலாற்று நூலையும், “சி.வை தாமோதரம்பிள்ளை அவர்கள் சரித்திரம்” (1934) என்னும் நூலுட்பட பல பாடநூல்களையும், பொது நூல்களையும் எழுதியவர். பாவலருக்கு பின்னாலிருந்த இவ்வாறு வரலாறு மறக்கப்பட்ட பார்க்கப்படாத விடயமாக இருக்கிறது.

மது விலக்கு பிரசாரத்தை எழுத்து மூலமாகவும், சொற்பொலிவு மூலமாகவும் முதன்முதலில் செய்தவர் பாவலர். தென்னிலங்கையில் சூரியமல் இயக்கம் ஆரம்பமாவதற்கு முன்னர் பாவலர் இத்துறையில் ஆற்றிய பணிகள் இன்று எம்மவராலேயே மறக்கப்பட்டுவிட்டன. இலங்கையில் தொழிற் சங்கத்தை ஆரம்பித்தவர் A.E. குணசிங்க என்றும், மதுவிலக்குப் பிரசாரம் சூரியமல் இயக்கத்துடன் ஆரம்பமானது என்றும் இன்று வரலாற்றுப் பதிவாகியிருப்பது எமது அறியாமையாலும் அசமந்தப் போக்கினாலும் தான் என்பதை மறுக்க முடியாது. இது மட்டுமல்ல பாவலர் அவர்கள் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம், வட இலங்கை சங்கீத சபா ஆகியவற்றை நிறுவுவதற்கும் முன்னோடியாகயிருந்தவர்.

எந்த வரலாற்றிலும் (தனிமனித வரலாறு சரி, நாடுகளின் போர்களின் வரலாறு சரி) எதிலும் எழுதப்பட்ட வரலாற்றை விட எழுதப்படாத மறக்கப்பட்ட சில சமயங்களில் மறைக்கப்பட்ட வரலாறு ஒன்று உண்டு. என்பது இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்த எழுதப்படாத வரலாறுதான் உண்மை வரலாறு என்கிறார் பேராசிரியர் C.R. Brown என்ற வரலாற்றறிஞர்.

பாவலரின் வரலாறு மகாஜனாவின் வரலாறு மகாஜனாவின் வரலாறு பாவலரின் வரலாறு இது ஒருபக்க உண்மை. எனவே மகாஜனா பற்றி நாங்கள் அறிந்திராத வரலாற்றை கண்டறிந்தால் பாவலரின் நாமறியாத வரலாற்றையும் கண்டறியும் வாய்ப்புண்டாகும்.

மகாஜனாவின் தாபகராகவும், பாவலராகவும் மட்டும் இவரை பார்க்காது அவர் மீது ஒரு பன்முகப் பார்வையை பார்ப்பதனூடாக உண்மையான மாமனிதன் பாவலரை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டிய மகா பொறுப்பு மகாஜனன்களுக்கு உண்டு. இதனை நாம் பொறுப்புணர்ச்சியுடன் செய்யாது விட்டால் பாவலர் மகாஜனாவைத் தாபித்தவர், பல தமிழ்ப் பாடல்களைப் பாடியவர் என்ற மட்டிலும் மாத்திரம் அறியப்படுகின்றார், அறியப்படுவார். பாவலர் மின்மனி அல்ல, சூரியப் பிரகாசம்.

தலைமைத்துவம், செயல்வீரர், துணிவு, நம்பிக்கை, கண்டிப்பு, அர்ப்பணிப்பு, விடாமுயற்சி, நியாயத்துக்காக போராடுதல், சமூக அக்கறை இன்னோரன்ன பண்புகளின் உறைவிடமான பாவலர் வரலாறு உள்ளது. உள்ள வரலாறு மாணவர் மனதில் பதியுமாறு எழுதப்பட வேண்டும். ஆண்டு தோறும் நிறுவியவர் தினத்தை கொண்டாடுவதோடு அமையாது வரலாற்றை சரியான முறையில் ஆவணமாக்கி அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கும் பணியைச் செய்வது பாவலருக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாக, வணக்கமாக இருக்கும்.

தந்தையர் வழியில் தூர நோக்குடன் செயற்பட்டமையாலேயே அதிபர் ஜெயரட்னம் அவரகளால் மகாஜனாவை முழு இலங்கையிலும் தலைசிறந்து விளங்கும் கல்விக்கழகமாக இட்டுச் செல்ல முடிந்துள்ளது.

வரலாறு என்பது கிடையான கோடல்ல, அது ஒரு சக்கரம், வெற்றியும் தோல்வியும் நாணயத்தின் இரு பக்கங்கள் போலவே உயர்ச்சியும் வீழ்ச்சியும் வரலாற்றின் இரு பக்கங்கள்.

யுத்தத்தின் வடுக்களை சுமந்து நிற்கும் மகாஜனாவை ஒரு பொற்காலதத்தை நோக்கி இட்டுச் செல்ல வேண்டும். பழைய மாணவர் பாடசாலை ஆளணியினருடன் ஒன்று திரண்டு இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட முன் வர வேண்டும்.

பாடசாலையின் அபிவிருத்திக்காக உலகெங்கும் வியாபித்துள்ள பழைய மாணவர் சங்கங்கள் திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றமை வரவேற்கத்தக்கது. இதற்கு இன்னும் சற்று அப்பால், நீண்டகாலப் பண்பாட்டு நோக்கில் எவ்வாறான செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது. மகாஜனாவின் வினைத்திறனை உயர்துவது எப்படி? இருக்கின்ற வளங்களின் மூலம் உச்சப்பயனைப் பெறுவது எவ்வாறு? என்பது குறித்து எதுவித சுயநலன்களுக்கும் அப்பால் சிந்திக்க வேண்டியுள்ளது.

எமது ஆசிரியர்கள் தமது தொழிலை மனப்பூர்வமாகவும் அர்ப்பணிப்புச்சிந்தையுடனும் புரிவதற்கு அவர்களின் வாண்மையை விருத்தி செய்வதற்குத் தூண்டியாக பழைய மாணவர் சங்கம் எவ்வாறு தொழிற்பட முடியும்? எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பன குறித்து தீவிரமாக சிந்தித்து செயற்பட வேண்டும்.

பாவலரவர்களும் அவர் மைந்தனும் பாடசாலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டமைக்கு அவர்களின் தலைமைத்துவமே காரணம். தீர்க்க தரிசனத்துடன் தமது அனைத்து சக்தியையும் வளங்களையும் ஆளுமையும் ஒன்று திரட்டி போட்ட முதலீட்டின் அறுவடையை நாம் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

வரலாற்றை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு பணியாற்ற வேண்டும். பாடசாலைக்கு பணம் சேர்த்து வைப்பதென்பது நீண்ட கால முதலீடு அல்ல. இன்னும் நூறு வருடங்களில் பெறவிருக்கும் நல் விளைச்சலுக்கான வித்துக்களை நாம் எந்த விதத்தில் நாட்ட வேண்டும்? பௌதீக மற்றும் மனித வளங்களில் எந்த வளத்தின் மீது முதலீடு செய்வது பொருத்தமானது.

இன்று ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகத்தின் கல்வி விருத்தி என்பதே ஆபத்துக்குரிய பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. இந்தச்சூழலில்தான் எமது பாடசாலைக்கான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆக பாவலருக்கும் பாடசாலைக்கும் நாம் ஆற்ற வேண்டிய பணிகள் நிறைய உள. இதற்கென மகாஜனன்கள் நாமனைவரும் ஒன்று திரள்வோம், சாதிப்போம்.

வெல்லுக மகாஜனா மாதா!

திருமதி, வானதி காண்டீபன்

with best compliments from

# ROYALE ELECTRONICS (PVT) LTD

:

**Duty Free Shop**

No.4, Arrival Lounge,

Katunayake International Airport

Sri Lanka.

**Importers & Dealers:**

Popular brands of LCD, LED,TV

Audio/Video & Appliances.

Office: 316/1 ,Sea Street,Colombo 11,Sri Lanka.

Tel: 0094112335013 Fax:0094112339500

Email:royale@sltnet.lk

with best compliments from

# D.M. JEEWAN (PVT) LTD

**Duty Free Shop:**

No.17A, Arrival Lounge,

Katunayake International Airport

Sri Lanka

Tel: 0112263315

**IMPORTERS & DEALERS:ELECTRONIC,ELECTRONIC AND HOUSEHOLD APPLIANCES.**

**SOLE AGENTS FOR PREMIER&ARISTON**

Tel: 0094112251270 Fax:0094112721441

Email:dmjdfs@sltnet.lk

with best compliments from

# AMF DUTY FREE SHOP

No.23A, Arrival Lounge,

Katunayake International Airport


Sri Lanka.

Tel: 0094112252966

**Importers & Dealers:**

Popular brands of LCD, LED, TV

Audio/Video & Appliances.



*with best compliments from*

# PESONS

**Duty Free Shop:**

No.16A, Arrival Lounge,

Katunayake International Airport, Sri Lanka.

**Dealers in :**

All Popular brands of Electrical/ Electronic goods

(SONY,LG,PANASONIC,PHILIPS ETC....)

AND EXCLUSIVE 22K GOLD JEWELLERY

Tel: 0094112252614 ,0094112263337



with best compliments from

# ZAM GEMS

**Duty Free Shop:**

No.38D, Departure Lounge,

Katunayake International Airport

Sri Lanka.

Tel: 0094112260979

**THE PIONEERS IN GEMS & JEWELLERY**




with best compliments from

# Metro International (Pvt) Ltd

**Duty Free Shop:**

No.3A, Arrival Lounge,

Katunayake International Airport


Sri Lanka.

Tel: 0094112263355

**Importers & Dealers:**

Popular brands of LCD, LED,TV

Audio/Video & Appliances.

## பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ள மாணவர்கள் விபரம்

2011ம் ஆண்டு க.பொ.த (உ.த) பரீட்சைப் பெறுபேறுகள் 2012ம் ஆண்டு வெளியாகியது. அதற்குரிய வெட்டுப்புள்ளி 2013ம் ஆண்டு வெளியாகியது. இதன்படி எமது கல்லூரியிலிருந்து கீழ்வரும் துறைகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர் விபரம் வருமாறு: (புதிய பழையபாடத்திட்டம், பழைய பாடத்திட்டம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | பொறியியல் துறை | - | மூன்று மாணவர்கள் |
| 2. | கணனி விஞ்ஞானம் | - | இரண்டு மாணவர்கள் |
| 3. | பௌதீகவிஞ்ஞானம் | - | இரண்டு மாணவர்கள் |
| 4. | விவசாயவிஞ்ஞானம் | - | இரண்டு மாணவர்கள் |
| 5. | பிரயோகவிஞ்ஞானம் | - | ஒரு மாணவர் |
| 6. | முகாமைத்துவம் | - | இரண்டு மாணவர்கள் |
| 7. | வணிகக்கல்வி | - | ஒரு மாணவர் |
| 8. | கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | - | இரண்டு மாணவர்கள் |
| 9. | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | - | மூன்று மாணவர்கள் |
| 10. | கலைப்பிரிவு | - | பதினேழு மாணவர்கள் |
| 11. | சங்கீதம் | - | இரண்டு மாணவர்கள் |
| 12. | சித்திரமும் வடிவமைப்பும் | - | இருபது மாணவர்கள் |

2012ம் ஆண்டு க.பொ.த (உ.த) பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியது. இதன்படி எமது கல்லூரியிலிருந்து கீழ்வரும் துறைகளுக்கு தெரிவுசெய்யப்பட வாய்ப்புள்ள மாணவர்கள் எண்ணிக்கை வருமாறு: (புதிய பாடத்திட்டம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | மருத்துவத்துறை துறை | - | ஒரு மாணவர் |
| 2. | உயிரியல் துறை | - | ஆறு மாணவர்கள் |
| 3. | பொறியியல் துறை | - | இரண்டு மாணவர்கள் |
| 4. | கணிதத்துறை | - | ஏழு மாணவர்கள் |
| 5. | முகாமைத்துவம் | - | இரண்டு மாணவர்கள் |
| 6. | வர்த்தகத்துறை | - | ஆறு மாணவர்கள் |
| 7. | கலைப்பிரிவு | - | பத்து மாணவர்கள் |

## தேசிய, மாகாண மட்டத்தில் சாதனைபடைத்த மாணவர்கள் விபரம் - 2012

தமிழ்மொழித்தினம் - தேசிய மட்டம்

| | | | |
|---|---|---|---|
| கவிதையாக்கம் | - 1ம் இடம் | - | வ.விதுஷா |
| வாசிப்பு | - 2ம் இடம் | - | லி.தீபிகா |

தேசிய மட்ட புத்தாக்க கண்காட்சி

பிரேமினி விஜயகுமார் - 3ம் இடம்

ஆங்கிலமொழித்தினப் போட்டி

ம.தரண்யா ஆங்கிலமொழித்தினப் போட்டியில் மாகாண மட்டத்தில் 2ம் இடம் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்கு பற்றினார்.

தேசிய மட்டம்

உயரம் பாய்தல் - 3ம் இடம் - மு.கிருஸ்ணா

அகில இலங்கைப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிக்கு தகுதிபெற்ற அணிகள் விபரம்

| | | |
|---|---|---|
| கரப்பந்து | - 19 வயது பெண்கள் அணி | - 1ம் இடம் |
| சதுரங்கம் | - 19 வயது பெண்கள் அணி | - 3ம் இடம் |
| | 19 வயது ஆண்கள் அணி | - 3ம் இடம் |

மாகாண மட்ட கராத்தே போட்டி

| | | |
|---|---|---|
| செல்வி வற்சாஜினி சிவானந்தராஜா - | காட்டா | - 2ம் இடம் |
| | குமிற்றே | - 3ம் இடம் |

தேசிய மட்டத்தில் செல்வன்.இ.மகிந்தன் 19 வயதின் கீழ் ஆண்கள் பிரிவு சதுரங்கப் போட்டியில் (Board Prize) பெற்றுள்ளார்.

## 2013

தேசிய மட்டம்

| | | | |
|---|---|---|---|
| கோலூன்றிபாய்தல் | - 1ம் இடம் | - | ஜெ.அனித்தா |
| கோலூன்றிபாய்தல் | - 1ம் இடம் | - | இ.லக்ஸ்மன் |
| கோலூன்றிபாய்தல் | - 2ம் இடம் | - | சி.டிலக்ஷன் |
| கோலூன்றிபாய்தல் | - 3ம் இடம் | - | இ.மயூரன் |

with best compliments from

AA

# ARUNA AGENCY

*Dealers in Stainless Steel,*
*Utensil Kerosene Stove, Home hold Items*

No : 183, Central Road, Colombo - 12
Tel : 011 4378874, 077 3785603

W R
W R P G
P G

# Raj

## Pharmacy & Groceries

*Wholesale Retail Pharmaceutical, Grocery Dispencing*

189 & 189 A1/1, W.A. Silva Mawatha,
Colombo - 06

Tel : 011 5655566
Mob : 077 3309336
077 3632019

E-mail : norosh.lk26@yahoo.com

with best compliments from

# Sharmila's Duty Free (Pvt) Ltd

**Duty Free Shop:**

No.24 Arrival Lounge,

Katunayake International Airport

Sri Lanka.

Tel: 0094112263335

**Importers & Dealers:**

Popular brands of LCD, LED,TV

Audio/Video & Appliances.

Head Office: 410/11, Bullers Road,Colombo 07, Sri Lanka.

Tel: 0094114517779 Fax:0094112689077

with best compliments from

# HERAMBA

## Travels & Tours

Orchard Shopping Complex (Ground Floor)

**No : 7-14, Galle Road ,**
**Colombo -06**

***Tel : 0552066, 2552057***
***Mob ; 0777-348388***
***Fax : 2552057***

---

with best compliments from

Corporate Management

## Corporate Management Consortium (Private) Limited

No. 174 1/1, Mohamed Zain Mawatha, Colombo 12.
Tel: 2334314, 2334315 Fax: 2449893
E-mail: at255@slt.lk

with best compliments from

# Chemistry Anywhere, Anytime

LEARN
WiZiQ

**For the first time in Sri Lanka Introducing LIVE, INTERACTIVE Online Chemistry Classes via our virtual classroom**

edexcel
advancing learning, changing lives

UNIVERSITY of CAMBRIDGE
International Examinations

No more Travelling, Study LIVE while you stay at your home or any where in the world !


Save valuable Time & Money.

All classes are RECORDED for future reference, No more missing classes!

Printed Study Packs provided for each lesson.

Proven effective by many students by their excellent results.

To view a sample class log on to:
www.chembase.webs.com



**Chembase**
School of Chemistry

**No.34,1/2, Galle Road, Dehiwela**

**0776-534233**

with best compliments from

LG

Life's Good



Your family's

health is safe


under the protection

of energy saving

LG Electronics &

Home Appliances

**ABANS LTD**
**DUTY FREE SHOP NO 13 A,**
**ARRIVALS TERMINAL**
**B. I. A. KATUNAYAKE**



Abans

with best compliments from

# NANTHAN
## Digital



**Professionals for**

*Videography & Photography & Studio*

**Photo Printing**
**Graphic Designing**
**Video Editting**
**Chemical Framing**
**Story Book Album**
**DVCAM - Mini DV**
**VHS - VCD - DVD**
**VHS C - HI 8**
**HDV & BLU RAY**

**431/6, Galle Road, Colombo - 06**
**Opposite Arpico Super Centre**
**Tel : 0112 363033 /34, 0777 734676**
**E-mail : ndv@nathandigital.com**

with best compliments from



with best compliments from

Visit our Duty Free Shop on your arrival

# F.W. ELECTRONIC DUTY FREE (PVT) LTD

No.7A, Arrival Lounge,

Katunayake International Airport, Sri Lanka.


**Importers & Dealers:**

Popular brands of LCD, LED, TV, Audio/Video &

Household Appliances.

Tel: 0094114994234, Fax:0094112449563

E-mail: fwelect@gmail.com



# Save Hundred, reap Thousand

NSB

National Savings Bank

*Pioneer of savings now introduction*

## FIVE YEARS SAVINGS ACCOUNT

*With Highest interest rate*

| MONTHLY INSTALLING | INTEREST RATE |
|---|---|
| 100 | 8.5% |
| 200 | 9.00% |
| 300 | 9.50% |
| 400 | 10.00% |
| 500 | 10.50% |
| 1000 or Multiples | 11.00% |

**NATIONAL SAVINGS BANK**

Wellawatta Branch

Tel : 0112 554203, 0112- 554372

(Condition applied)

with best compliments from

# G.T.V ENTERPRISES
(PVT) LTD.

Importers Exporters , Food Producers Foorarfing &

Clearing Agents Cargo Services to all Countries by air &

Sea Courier Service, Srilankan Air lines Cargo Agent


**VIJEYA ENTERPRISES**

**MAHARAJA FOOD PRODUCTS**

No: 18/3, Dr. E.A. Cooray Mawatha, Colombo -06

Tel : 0112 360926, 0114 654 444
Fax : 0112 361 139
E-mail : info@gtventer.com
Web : www.gtventer.com

with best compliments from



with best compliments from

# RAMKA ASSOCIATES

F.L.G 16

Dias Place

Colombo 12

with best compliments from

# FREIGHT CARGO SERVICES

**LEADERS IN CUSTOMS FORWARDING AND**

**CLEARING SERVICES FOR**

**IMPORT GOODS**

**23 1/1**

Meeraniya street, Colombo 12

0714739287



with best compliments from

# CROWN ELECTRONICS

**Duty Free Shop:**

No.11A, Arrival Lounge,

Katunayake International Airport

Sri Lanka.

**Importers & Dealers:**

Popular brands of LCD, LED,TV

Audio/Video & Appliances.

Office: 316/1 ,Sea Street,Colombo 11,Sri Lanka.

Tel: 0094112335013 Fax:0094112339500

Email:royale@sltnet.lk

with best compliments from

LEELA
SYMBOL OF QUALITY

# LEELA EXPORTS & IMPORTS

Manufacturer & Exporter of Spices and Food Items

SLSI ISO 9001
ISO 9001 QUALITY SYSTEM CERTIFIED ORGANIZATION
MGMT. SYS. RvA C 155

42, Srimath Bandaranayake Mawatha,
Colombo 12, Sri Lanka
Tel. : +94-11-2423399, +94-11-2440128; Fax : +94-11-2423414;
e-mail:leelaexp@sltnet.lk

GOLD AWARD WINNER NCE EXPORTS AWARD

## Official Media Partner:

**Vettri FM**

90.4 / 90.6 /

www.vettri.lk

**உத்தியோகபூர்வ ஊடகப் பங்காளர்**

**வெற்றி** FM-

90.4 / 90.6 /

www.vettri.lk

*with best compliments from*

# G&R TRAVELS & TOURS


*Semi Luxury Transport Service & Special Service*





**Kannathitty Junction, Jaffna**

**Tel : 021 3202595, 077 6169446, 077 1106335**

# UDAYA






## Jewellers

303, Galle Road, Wellawatta,
Colombo - 06
Tel : 0112 554933

with best compliments from

# V.MANICKAM
# &
# BROTHER

**RICE හාල් அரிசி**



34, 4th Cross Street, Colombo-11

Tel : 2323408, 2323986



www.blueoceanresidencies.com

S.Thumilan Group Chairman
ACA, ACMA, ACCA, CGMA, CPA (Aus), MCSI (UK), FMAAT (SL), ACS

# Think Luxury Live Luxury

Investment Property • Luxury Living • Holiday Home

| Sea View Project | City View Project | Sea View Project | Sea View Project |
|---|---|---|---|
| No. 03, Samudra Mawatha Mount Lavinia | No. 48, Templers Road Mount Lavinia | No. 03, College Avenue Mount Lavinia | No. 18, Retreat Road Colombo - 04 |
| 3 Months Only | 6 Months Only | 7 Months Only | 18 Months Only |


Uniquely designed architectural spacious luxury apartments with comfort and amenities to give you an aesthetic ambience of peace & heavenly living in the heart of Mount Lavinia and Colombo....

## Why **Blue Ocean** is Brand For Apartment ?

APPROVED EMPLOYER ACCA PLATINUM

BOI SRI LANKA

- All regulatory compliances and approved plans with truly architecture designed with modern amenities.
- Spacious modern room layouts with fresh air ventilation circulation systems and privacy in access.
- Prominent landmarks surrounded with uncongested wide access roads.
- Uncongested decent residential living environment with affordable monthly maintenance cost.
- Guaranteed minimum return, property exchange, flexible payback schedule, apartment rental, apartment repurchases and assistance in obtaining bank loans
- Articulate legal documents for your purchase and assurance of on-time occupancy
- High profile Human Resource talent with team members representing the roles of Chartered Architects, Chartered Engineers, Chartered Accountants, Qualified Interior Designers and other industry professionals



FOR INQUIRIES:
0777 755 323
0777 755 657
0771 689 175

**Blue Ocean Group of Companies**
(BUILDING THE FACE OF FUTURE)

Office: #32, 2nd Floor, Galle Road, Dehiwala | Tel: 011 2722217
Email: marketing@blueoceanresidencies.com

Blue Ocean™
BUILDING THE FACE OF FUTURE




Printed by: Refai Print Tel: 011 2